# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II
# DINDIGUL.

## C.C.No.240/2016
## Prosecution Witness : 4

| | | | |
|---|---|---|---|
| **Name** | : குமார் | **Caste** | : |
| **Father's Name** | : மாரிமுத்து | **Calling** | : கூலி |
| **Village** | : தோட்டனூத்து முகாம் | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 62/2026 |
| | | **Dated** | : 07.09.2026 |

**07.09.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 6 **திரு. குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.4** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**A1 முதல் A5 எதிரிகள் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் தோட்டனூத்து முகாமில் குடியிருந்து கூலி வேலை செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. கடந்த 25.01.2016 நான் ஒயின்ஷாப் பாரில் கூலி வேலை செய்துகொண்டிருந்தபோது போலிசார் என் முன்னால் படம் வரைந்து சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் கேட்டார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.09.07 15:02:56 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.240/2016**
**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அந்தோணி வின்செண்ட் | **Caste** | : |
| **Father's Name** | : ராயப்பன் | **Calling** | : சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : **50/2026** |
| | | **Dated** | : **07.09.2026** |

**07.09.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 **திரு. அந்தோணி வின்செண்ட்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.3** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**A1 முதல் A5 எதிரிகள் ஆஜர்.**

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை**</u>

நான் தற்போது திண்டுக்கல் சின்னாளப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். கடந்த 25.01.2016 நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார், தலைமைக்காவலர் சந்திரசேகர், முதல் நிலைக்காவலர் ஜெகசாமி மற்றும் சார்பு ஆய்வாளர் பக்தவசலம் உடன் குற்ற நடவடிக்கைக்காக ரோந்துசெய்த போது திண்டுக்கல் நாகல் நகர் புதுார் ரிலையன்ஸ் டவர் அருகே வந்தபோது தமிழக வாழ்வுரிமைக்கட்சியைச் சேர்ந்த எதிரிகள் போராட்டம் செய்தபோது அவர்களை எச்சரித்தும் கேட்காததால் எதிரிகளை கைது செய்து நிலையம்

அழைத்துவந்த முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் டவர் உள்ள பகுதி பல மக்கள் நடமாடும் இடம் என்றால் சரிதான். நான் போலிசாா் கொடுத்த வாக்குமூலத்தில் பொதுமக்கள் யாரும் பார்த்ததததாகவோ நின்றதாகவோ ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் பகல் 11.45 மணி என்றால் சரிதான். அந்த இடத்தில் நாங்கள் பணி புரிந்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை.

எதிரிகள் தமிழக வாழ்வுரிமை கட்சியில் இருந்தார்கள் என்பதற்காக எந்தவொரு ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டவரில் ஏறி தற்கொலை முயற்சி செய்ததை தடுப்பதற்காக தீயணைப்பு துறைக்கு போன் செய்து வரச்சொன்னேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வேறு யாரோ செய்த சம்பவத்தை நான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**
இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.09.07 15:03:03 +0530

Judicial Magistrate No.II
Dindigul.